1981 ஏப்ரல் 4]

திருவில்லிபுத்தூரிலுள்ள நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள்

*வினா எண். 644— திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு கைத்தறி கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) திருவில்லிபுத்தூர் நேதாஜி நெசவாளர் கூட்டுறவுச் சங்கமும் கோவிந்தன் நெசவாளர் கூட்டுறவுச் சங்கமும் செயல்படாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம், எனில் இரு சங்கமும் செயல்படுவதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : (அ) திருவில்லிபுத்தூரில் உள்ள நேதாஜி கூட்டுறவு சங்கமும், கோவிந்தன் நெசவாளர் கூட்டுறவுச் சங்கமும் தற்போது செயல்பட்டு வருகின்றன.

(ஆ) இவ் வினாவிற்கு இடமில்லை.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தச் சங்கங்கள் செயல்பட்டு வருவதாகச் சொல்கிறார்கள். ஆரம்பத்தில் இருந்த மெம்பர்கள் இப்போது குறைந்து கொண்டே வருகிறார்கள். 1976 ஆம் ஆண்டு அந்த சொஸைட்டி தலைவர் டைரக்டர் இலட்சக்கணக்கில் கையாடல் பண்ணிவிட்டதாக அவர்கள் மேல் வழக்கு நடந்து வருகிறது. அவர்கள் பினாமி பெயரில் நூல்களை எடுத்து அந்த சொஸைட்டி இயங்காமல் செய்து விட்டார்கள். ஆதலால், அந்த சொஸைட்டி இயங்குவதற்கு பினாமி பெயரில் நூல் உற்பத்தி செய்து கொடுக்காத அந்த மெம்பர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கிற வினாவிற்காக குறிப்புகள் இங்கே இல்லை. 1976 ஆம் ஆண்டு அதன் தலைவர் அவர்கள் கையாடல் செய்து வழக்கு நடைமுறையில் இருப்பதாகக் கூறுகிறார்கள். இன்னும் பல தவறுகள் செய்து வருவதாகக் கூறுகிறார்கள். அப்படி இருக்குமானால் நிச்சயமாகத் தவறுகள்செய்பவர்கள் மீது கடுமையான நடவடிக்கையை இந்த அரசு எடுக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்,

திரு. இரா. தாமரைக்கனி : இந்தச் சங்கத்தில் புது உறுப்பினரையும் சேர்த்து அந்த உறுப்பினர்கள் நெய்யக்கூடிய வகையில் புதுப்புது இரகங்களை அவர்களுக்குக் கொடுத்து உடனுக்

[1981 ஏப்ரல் 4

குடன் உற்பத்தி செய்த துணிகளை கோவாப்டெக்ஸ் மூலம் கொள் முதல் செய்து, அதோடு அது நலிந்த சங்கமாக இருப்பதால் கடனை அதிகமாகக் கொடுக்கவும் அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முதலில் ஊழல் நடந்துள்ளதாகச் சொன்னார்கள். அந்தச் சங்கத்திற்குப் பணம் கொடுத்தால் என்னாகிறது ?

கைத்தறிகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ள துணி இரகங்கள்

*வினா எண். 645—திரு இரா. தாமரைக்கனி : மாண்புமிகு கைத்தறி-கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கைத்தறிகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ள இரகங்களை விசைத்தறிகளில் உற்பத்தி செய்யப்படாமல் தடை செய்ய என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

மாண்புமிகு எஸ். திரு. என். இராசேந்திரன் : கைத்தறிகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ள இரகங்களை விசைத் தறிகளில் உற்பத்தி செய்யப்படாமல் தடை செய்ய, கைத்தறி ஆய்வாளர், கைத்தறி அலுவலர், துணிநூல் கட்டுப்பாடு அதிகாரிகள் ஆகியவர்கள் அவ்வப்போது விசைத்தறிகளில் துணி உற்பத்தி செய்யப்படும் இடங்களுக்கு திடீர் விஜயம் செய்து கண்காணித்து வருகின்றனர். தடையை மீறுபவர்கள்மீது நீதி மன்றங்கள் மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. இரா தாமரைக்கனி : கைத்தறிக்கு என்று ஒதுக்கப்பட்டுள்ள காஸ், பாண்டேஜ் துணி விசைத்தறியில் உற்பத்தி செய்யக்கூடாது என்று உச்ச நீதிமன்றத்தில் ஆணை பிறப்பித்தும் விசைத் தறிகளில் இன்னும் அவை உற்பத்தி செய்யப்படுகின்றன. அதைத் தடுக்க அரசு என்ன நடவடிக்கைகள் எடுத்துள்ளது ? எவ்வளவு வழக்குகள் இதுவரை தொடரப்பட்டுள்ளன ?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : கைத்தறிக்கு, அதன் மேம்பாட்டிற்கு 11 இரகத் துணிகள் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதில் தவறு செய்கிறவர்கள் மீது நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டிருக்கிறது. இருந்தாலும் வெளியிடப்பட்டுள்ள உத்தரவுகளை நல்ல முறையில் செயல் படுத்த முடியவில்லை. அதற்கான காரணங்கள், நீதி மன்றங்களில் இந்த உத்தரவுகள் செல்லுபடியாகாது என அடிக்கடி வழக்குகள் போடப்பட்டுள்ளன. விசைத்தறிகள், கைத்தறிகளைவிட குறைந்தவிலையில் துணிகள் உற்பத்தி செய்வதாக எடுத்துக் கூறப்பட்டுள்ளது. அத்தியாவசியப் பண்டங்கள் சட்டத்தின் கீழ் ஓர் உற்பத்தியாளர் தகுந்த காரணங்களை எடுத்துக்கூறினால், மேற்குறித்த உத்தரவு